**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 03.02.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**ஊடுருவிய மரத்தாவரங்களின் மேலாண்மை குறித்த**

**சர்வதேச அளவில் கருத்தரங்கு**

மாநில திட்டக்குழுவின் தமிழ்நாடு மாநில நில பயன்பாட்டு ஆய்வு வாரியம், சென்னை மற்றும் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம் இணைந்து நடத்தும் ஊடுருவிய மரத்தாவரங்களின் மேலாண்மை பற்றிய சர்வதேச கருத்தரங்கின் துவக்க விழா நேற்று பிப்ரவரி 2, 2023 மேட்டுப்பாளையத்தில் உள்ள பிளாக் தண்டரில் நடைபெற்றது. இந்த சர்வதேச கருத்தரங்கில் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் க.த. பார்த்திபன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு மாநில திட்டக்குழு, துணை வனப்பாதுகாவலர் திருமதி. எஸ். சுதா, இ.வ.ப. இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமான ஊடுருவிய மரத்தாவரங்களை வனப் பகுதிகளிலும், விவசாய நிலங்களிலும், நம்மளவில் கட்டுப்படுத்துவது குறித்து உரையாற்றினார்.

தமிழ்நாடு மாநில திட்டக்குழு உறுப்பினர் பேராசிரியர் ர. சீனிவாசன் தனது துவக்க உரையில் ஊடுருவிய மரத் தாவரங்களிலிருந்து வனப் பகுதியை பாதுகாக்கும் முறைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். சட்டமன்ற உறுப்பினர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, ஊடுருவிய மரத் தாவரங்களின் புள்ளியல் விவரங்களைப் பற்றி இன்றைய தலைமுறையினர் முறையாக அறிந்து செயலாற்ற வேண்டும் எனக் கூறினார். நீர்வாழ் தாவரங்களை ஊடுருவிய தாவரங்களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் கூறினார். தமிழ்நாடு முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் திரு.சுப்ரத் மொகபத்ரா, தனது தலைமை உரையில் பெருமளவில் ஊடுருவிய மரத் தாவர இனங்களான நெய்வேலி காட்டாமணக்கு, உண்ணிச் செடி, வெங்காயத் தாமரை மற்றும் சீமைக் கருவேல் போன்றவற்றை எவ்வாறுக் கட்டுப்படுத்தலாம் என்பது குறித்தும், அத்தாவரங்களிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரிப்பது குறித்தும் உரையாற்றினார்.

வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலை பேராசிரியர் முனைவர் ஐ. சேகர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இக்கருத்தரங்கில் **100** க்கும் மேற்பட்ட பயனாளிகளான மாநில திட்டக்குழு உறுப்பினர்கள், தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, உத்தராஞ்சல் மற்றும் கர்நாடகா மாநில வன பாதுகாப்பு அலுவலர்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சி மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவர்கள் கலந்து கொண்டார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**